04.03.2026 MCOP.No.107/2020 PW1 Name:பன்னீர் செல்வம்

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கபட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. ஆட்டோவின் பதிவு புத்தகம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ம.சா.ஆ.3 ஆவணத்தில் ஆட்டோ மணி என்பவருக்கு சொந்தமானது ஆகும். ம.சா.ஆ.4 ஆவணத்தில் ஆட்டோ உரிமையாளர் பெயர் அமீர்பாஷா என குறிப்பிடபட்டுள்ளது. இரண்டு ஆவணங்களிலும் 1ம் எதிர்மனுதாரர் பெயர் குறிப்பிடபடவில்லை. ம.சா.ஆ.4 ஆவணம் விபத்தில் தொடர்புடைய ஆட்டோவிற்காக 2ம் எதிர்மனுதாரரால் வழங்கபட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.4 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.
2. 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் தொடர்புடைய ஆட்டோ எப்போதும் காப்பீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆட்டோ குறித்து 1ம் எதிர்மனுதாரருக்கும் 2ம் எதிர்மனுதாரருக்கும் எந்த ஒப்பந்தமும் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் எனக்கு இழப்பீடு கொடுக்கவேண்டியது கிடையாது என்றால் சரியல்ல. செட்டியப்பனுரில் தளபதி ஸ்டிக்கர் கடையில் ஏற்பட்டது. ஆட்டோ எனக்கு முன்னால் வந்தது. நான் திருப்பத்தூர் நோக்கி சென்றுக்கொண்டிருந்தேன். விபத்து நடந்த சாலை அகலமான இரண்டு வழி சாலை. என்னுடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

3. என்னுடைய தொழில் வருமானத்தை காட்டகூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய வருமான இழப்பு தொடர்பான விவரங்கள் வழக்கிற்காக அதிகபடித்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் முழுவதுமாக குணமடைந்துவிட்டது என்றும் விபத்தில் எனக்கு நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடிஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 04/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.04 14:49:28 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.